1975 நவம்பர் 4]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, 3-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் கிட்டததட்ட ரூ. 4,55,000 மதிப்புடைய நூல்கள் 22,000 துவக்கப் பள்ளிகளுக்கும் 5,000 உயர் துவக்கப் பள்ளிகளுக்கும் வாங்கி வழங்கபபடடுள்ளன. 1965-66-ல் ரூ, 2,05,000 மதிப்புள்ள புத்தகங்கள் 11,000 துவக்கப் பள்ளிகளுக்கும் 4,000 உயர் துவக்கப் பள்ளிகளுக்கும் வாங்கி வழங்கப்பட்டுள்ளன. நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ. 4,59,000 விலை மதிப்புடைய புத்தகங்கள் 10,000 துவக்கப் பள்ளிகளுக்கும் 2.500 உயர் துவக்கப் பள்ளிகளுக்கும் வாங்கி வழங்கப்பட்டுள்ளன. 1974-75-ல் ரூ. 1,00,000 மதிப்புள்ள புத்தகங்கள் பல்வேறு பள்ளிகளுக்கு வாங்கி வழங்கப் பட்டுள்ளன. ஆகவே, ஒவ்வொரு பள்ளிக்கும் கிட்டத்தட்ட ரூ. 100 லிருந்து, ரூ. 150 வரை விலை மதிப்புள்ள புத்தகங்கள் மட்டும்தான் ஆங்காங்கு வழங்கப்படுகின்ற சூழ்நிலை இருந்து வருகிறது.

மேம்பாலங்கள்

* 169 வினா—திரு. த. சோனையா : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரையிலிருந்து விமான நிலையத்துக்கு செல்லும் வழியில் தெற்கு வாசலுக்குப் பக்கத்தில் இருப்புப் பாதையின் குறுக்கே மேம்பாலம் ஒன்று கட்டும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : ஆம்.

திரு. த. சோனையா : தலைவரவர்களே, மதுரையிலிருந்து விமான நிலையத்திற்குச் செல்கின்றபொழுது, மிக அவசரமாக, முக்கியமாக வியாபார பெரியவர்கள் எல்லாம் செல்கிற நேரத்தில் திடீரென்று மதுரை தெற்கு வாசலிலே இருக்கிற இருப்புப் பாதை கேட் சாத்தப்படுகிறது. கேட் திறக்கப்படுவதற்குள் விமானம் போய்விடுகிறது. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதுதான் ஆம் என்று சொல்லி விட்டாரே, மறுபடியும். . .

திரு. த. சோனையா : குறிப்பாக கூட்ஸ் ரெயில் போகும்போது அதிக நேரம் அடைக்கப்படுகிறது. ஆகவே, மிக அவசியம் இது என்று அரசாங்கம் கருதுகிற காரணததாலே, மிக விரைவாக மேம்பாலம் அமைக்க ஏறபாடு செய்யப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, இரயில்வே வாரியத்தின் இசைவுக்காக அனுப்பப்பட்டிருக்கிறது. அது கிடைத்தவுடன் அரசு மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கும்.

* 170 வினா—திரு. த. சோனையா : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மானாமதுரை இரயில்வே சந்திப்பு அருகில் இருப்புப் பாதையின் குறுக்கே மேம்பாலம் கட்டும் உத்தேசம் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இல்லை.

திரு. த. சோனையா : தலைவரவர்களே, மானாமதுரைக்குச் செல்கிறபொழுது இரயில் பாதையைக் கடந்து செல்ல வேண்டியிருக்கிறது. அந்த ஊருக்குள்ளே ஒரு பஸ் போனால் இன்னொரு பஸ் வர முடியவில்லை. அது மிக நெருக்கடியாக இருக்கிற இடம். அதை உத்தேசித்தாவது அரசு ஊருக்கு வெளியே வருகிற 'பை பாஸ்' ரோட்டிலே மேம்பாலம் கட்டிக் கொடுத்தால் வசதியாக இருக்கும். ஆகவே, மேம்பாலம் கட்டிக் கொடுக்க இனியாவது அரசு முயற்சிக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, மானாமதுரையைச் சுற்றித் தேசிய நெடுஞ்சாலையில் பை பாஸ் ரோடு ஒன்று போடப்பட்டு வருகிறது. அது முடிந்த பிறகு இது தேவையில்லை என்று அரசு கருதுகிறது.

வறட்சி நிவாரணப் பணிகள்

* 171. வினா—திரு. கே. எ. வகாப் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வந்தவாசி ஒன்றியத்தில் வறட்சி நிவாரணத் திட்டத்தின்கீழ் எடுக்கப்பட்ட வேலைகள் என்னென்ன ?

(இ) இவற்றிற்கான மொத்தச் செலவு எவ்வளவு ?